அகிலம் போற்றும் அன்னைமரிதாயே
மீண்டும் அகதியாய் தவிக்கின்ற நானும் உன் சேயே 2

தேவதூதன் அவதரித்த திருநாளும் நேற்று
தேசமே அவலத்தில் நீர்காடாய் இன்று 2
பள்ளிப்பையும் போனது பருசுப்பொருளும் போனது
நேற்றுஇருந்த நிம்மதியும் நீர் அள்ளிப்போனது

அகிலம் போற்றும் அன்னைமரிதாயே
மீண்டும் அகதியாய் தவிக்கின்ற நானும் உன் சேயே 2

அம்மா என்றழுதேன் அணைகாவலில்லை
அப்பா என்றளைத்தேன் அவர் குரலும் இல்லை
கிட்டிப்பொல் தொடங்கி கிட்டநின்ற உறவேங்கே
அடைக்கலம் என்ற அழுத ஆலையமும் எங்கே

அகிலம் போற்றும் அன்னைமரிதாயே
மீண்டும் அகதியாய் தவிக்கின்ற நானும் உன் சேயே 2

வேதனைக்கு சுட்டாலும் விழி வற்றி போனாலும்
விழ விழ எழுவேன் நான் வெய்யிலும் அலர்வேன் 2
உலகெல்லாம் தமிழ் உறவு உதவுகின்ற உளம் இருக்கு
தலைகோதி வாழ வைக்க தமிழீழ களம் இருக்கு

அகிலம் போற்றும் அன்னைமரிதாயே
மீண்டும் அகதியாய் தவிக்கின்ற நானும் உன் சேயே 2